இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 120 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 24 – திங்கள்கிழமை 09 டிசம்பர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 120: Thiruvalluvar Year - 2055 - Karthigai 24 - Monday 09 December 2024 - Dak 12 Pages ₹ 5.00

### கேரள மாநிலம் – வைக்கத்தில் டிச. 12ஆம் தேதி

# தந்தை பெரியார் நினைவகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## வைக்கம் போராட்ட வெற்றியின் நூற்றாண்டு நிறைவு விழாவிலும் பங்கேற்கிறார்!

**திருவனந்தபுரம், டிச. 9 -**

**கேரள மாநிலம் வைக்கத்தில் 8கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரும் 12ஆம் தேதி திறந்து வைக்கிறார். இவ்விழாவில் கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.**



கேரளாவின் கோட்டயம் மாவட்டத்தில் உள்ள வைக்கத்தில், கோயில் நுழைவுப் போராட்டம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் கடந்துவிட்டது. சமூக நீதிக்கான இந்த போராட்டத்தின் வெற்றியில் தந்தை பெரியார் ஆற்றிய பங்களிப்பை நினைவுகூரும் வகையில், வைக்கத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் 70 சென்ட் பரப்பில் அவருக்கு நினைவகம் அமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. இதில், பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சிக் கூடம், நூலகம், பார்வையாளர் மாடம், சிறுவர் பூங்கா உள்ளிட்டவை அமைந்துள்ளன.

இந்த கட்டிடங்களில் ஏற்பட்ட கரையான் அரிப்பு போன்றவற்றால் நினைவிடம் பழமையானதால் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பில் இந்த நினைவிடத்தை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கம் நகரில் உள்ள தந்தை பெரியார் நினைவகம் புனரமைப்பு பணிகள் தமிழக முதல்வர் - தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் படி கடந்த நிதி ஆண்டில் தமிழக அரசு சார்பில் சுமார் ஒன்பதரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழக நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் செய்தித்துறைஅமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் நேரடி கண்காணிப்பில் நடை பெற்று வந்தது. அந்த பணிகள் நிறைவு பெற்று இப்போது தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் புதுப்பொலிவுடன் திறப்பு விழா காண தயாராக உள்ளது.





**கேரள முதல்வர் பினராயி விஜயன் பங்கேற்பு!**

அந்த நினைவகம் மற்றும் நூலகம் திறப்பு விழா வரும் 12.12.2024 வியாமுன் அன்று காலை 10 மணியளவில் கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தமிழக நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகின்றது.

தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரும் 12ஆம் தேதி திறந்து வைத்து சிறப்புரை யாற்றுகிறார்.

வைக்கம் போராட்ட வெற்றியின் நூற்றாண்டு நிறைவு விழாவிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க உள்ளார்.

---

# டெல்லியை நோக்கி விவசாயிகள் பேரணி!

### ஒன்றிய அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்காததால் மீண்டும் போராட்டம்!

புதுடெல்லி, டிச. 9 -

டெல்லியை நோக்கிய பேரணியை மீண்டும் தொடங்கிய விவசாயிகள் மீது அரியானா போலீசார் கண்ணீர்புகை குண்டுகளை வீசி விரட்டி அடித்ததால் பதற்றம் அதிகரித்துள்ளது.

வேளாண் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப் அரியானா எல்லையில் உள்ள சம்பு பகுதியில் இருந்து விவசாயிகள் நேற்று முன்தினம் டெல்லி நோக்கி பேரணியை தொடங்கினர். தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த அவர்களை தடுத்து நிறுத்திய போலீஸார், அவர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கலைத்தனர். இதனால், போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் காயமடைந்தனர். டெல்லி செல்லாமல் தடுக்க அரியானா அரசு அமைத்த முள்வேலி தடுப்பு, ஆணி தடுப்புகளை தகர்த்தெறிந்து விவசாயிகள் டெல்லி நோக்கி முன்னேற முயன்றனர்.

இந்நிலையில், டெல்லிக்கு செல்லும் போராட்டத்தை ஒரு நாள் ஒத்தி வைத்திருப்பதாகவும், ஒன்றிய அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்காவிட்டால், மீண்டும் போராட்டத்தை தொடர உள்ளதாகவும் விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இது குறித்து எந்த அறிவிப்பையும் ஒன்றிய அரசு வெளியிடவில்லை. இந்நிலையில், டெல்லியை நோக்கிய பேரணியை விவசாயிகள் தொடங்கினர். அப்போது தடைகளை தகர்த்து முன்னேறியவர்களை போலீசார் தடுத்து நிறுத்த முயன்றனர். அப்போது, போலீசாரின் தடைகளை கடந்து விவசாயிகள் முன்னேற முயன்றனர். இதனைத் தொடர்ந்து போலீசார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் விவசாயிகளை விரட்டி அடித்தனர்.

---

### துணை நிதிநிலை அறிக்கை தாக்கல்:

# தமிழ்நாடு சட்டப்பேரவை இன்று கூடுகிறது!

### டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை ரத்து செய்யக் கோரும் தனித் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது!

சென்னை, டிச. 9 -

தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இதில் மதுரை மாவட்டத்தில் வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமையை, உடனடியாக ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, தனித்தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் 2 நாட்கள் நடைபெறும் என சபாநாயகர் அப்பாவு அறிவித்திருந்தார்.அதன் படி தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. காலை 9.30 மணிக்கு அவை கூடியதும் மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, முரசொலி நாளிதழின் நிர்வாக ஆசிரியர் முரசொலி செல்வம் உள்ளிட்டோர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

பின்னர் கேள்வி நேரம் தொடங்கும் நிலையில், உறுப்பினர்களின் கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளிக்கின்றனர். இதனைத் தொடர்ந்து 2024-25 ம் ஆண்டில் கூடுதல் செலவிற்காக துணை நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.



பின்னர் மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்யக் கோரியும்,, மாநில அரசின் அனுமதியின்றி சுரங்க உரிமை ஏலங்களை மேற்கொள்ளக்கூடாது என ஒன்றிய அரசை வலியுறுத்தியும் தனித்தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தொடரின் இரண்டாம் நாளான நாளை (செவ்வாய்கிழமை), கேள்வி நேரம் முடிந்ததும், துணை நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதம் நடைபெறுகிறது. உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளிக்கிறார். இதனைத் தொடர்ந்து கூடுதல் நிதி ஒதுக்குவதற்கான சட்ட மசோதா பேரவையில் நிறைவேற்றப்படுகிறது.

---

### கைவினைக் கலைஞர்களை தொழில் முனைவோர்களாக உயர்த்திட

# ‘கலைஞர் கைவினைத் திட்டத்தை’ப் பயன்படுத்திக் கொள்வீர்!

### தமிழ்நாடு அரசு ஆணை வெளியீடு!

சென்னை, டிச.8–

சமூகநீதி அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலும், கைவினைஞர்களைத் தொழில் முனைவோர்களாக உயர்த்திடும் உன்னத நோக்கிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ”கலைஞர் கைவினைத்திட்டம் என்ற பெயரில் தமிழ்நாட்டிற்கு என விரிவான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம், குடும்பத் தொழில் அடிப்படையில் அல்லாமல், 25 கைவினைக் கலைகள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் புதிய தொழிலைத் தொடங்குவதற்கும், செய்யும் தொழிலை நவீன வடிவில் விரிவாக்கம் செய்திடவும் கடன் உதவிகளும், திறன்மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.50,000/ வரை 25 சதவீதம் மானியத்துடன் கூடிய ரூ.3.00 இலட்சம் கடனுதவியும், 5 சதவீதம் வரை வட்டி மானியமும் வழங்குவதோடு, தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற குறைந்தபட்ச வயது 35 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மரவேலைப்பாடுகள், படகு தயாரித்தல், உலோக வேலைப்பாடுகள், பூட்டு தயாரித்தல், சிற்ப வேலைப்பாடுகள், கற்சிலை வடித்தல், கண்ணாடி வேலைப்பாடுகள், மண்பாண்டங்கள், சுடுமண் வேலைகள், கட்டட வேலைகள், கூடை முடைதல், கயிறு, பாய் பின்னுதல், துடைப்பான்கள் செய்தல், பொம்மைகள் தயாரித்தல், மலர் வேலைப்பாடுகள், மீன் வலை தயாரித்தல், தையல் வேலை, நகைசெய்தல், சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை, துணி வெளுத்தல் தேய்த்தல், இசைக்கருவிகள் தயாரித்தல், துணி நெய்தல் மற்றும் துணிகளில் கலை வேலைப்பாடுகள் செய்தல், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல், பாசிமணி வேலைப்பாடுகள், மூங்கில், சணல், பனை ஓலை, பிரம்பு வேலைப்பாடுகள், ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல், கண்ணாடி வேலைப்பாடுகள், சுதை வேலைப்பாடுகள், பழங்குடியினரின் இயற்கை சேகரிப்புகள் மற்றும் கைவினைப் பொருள்கள் உள்ளிட்ட 25 வகையான தொழில்களுக்குக் கடன் வழங்கப்படும். ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 10,000 கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற www.msmeonline.tn.gov.in இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியான விண்ணப்பங்களை மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளர்கள் தலைமையில் உள்ள குழு சரிபார்த்து, வங்கிகளுக்குப் பரிந்துரைக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள கைவினைக் கலைஞர்கள் இந்தத் திட்டத்தினை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வளம்பெற வேண்டும் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

### கடலூர் மழை வெள்ளப் பாதிப்பு பகுதிகளில் ஆய்வு!

# தென்பெண்ணை ஆற்றுப் பகுதிகளை ஒன்றியக் குழுவினர் பார்வையிட்டனர்!

### வெள்ளப் பாதிப்பு குறித்த விவரங்களை பொதுமக்களிடம் கேட்டறிந்தனர்!

கடலூர், டிச. 9 -

ஃபெஞ்சல் புயலால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மதிப்பீடு செய்து ஆய்வு செய்ய ஒன்றிய அரசின் பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் ராஜேஷ் குப்தா தலைமையிலான குழுவினர் தமிழ்நாடு வந்துள்ளனர். விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பல்வேறு குழுக்களாக பிரிந்து ஒன்றிய குழுவினர் நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர்.

பயிர் சேதம் உள்ளிட்ட விவரங்களை விவசாயிகளிடம் அவர்கள் கேட்டறிந்தனர். இதன் தொடர்ச்சியாக கடலூர் மாவட்டத்தில் மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தினை ஒன்றிய அரசின் குழுவினர் நேற்று ஆய்வு செய்தனர்.

பண்ருட்டி அருகே உள்ள பகண்டை பகுதியில் தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் சேதமடைந்த சாலைகள் மற்றும் விளை நிலங்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

தொடர்ந்து மேல்பட்டாம்பாக்கம், அழகிய நத்தம், குண்டுஉப்பலவாடி, கண்டக்காடு, நாணமேடு ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள், சாலைகள், பாலங்கள், தென்பெண்ணை ஆற்றின் கரைகள், வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் உள்ளிட்ட சேதங்கள் குறித்தும் விவசாயிகளிடம் அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

ஒன்றிய குழுவினருடன் கடலூர் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் மாவட்ட கண்காணிப்பு அதிகாரி மோகன் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.

பின்னர், கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை நடத்தி, பாதிப்புகள் குறித்த வீடியோ காட்சிகளையும் ஒன்றிய குழுவினர் பார்வையிட்டனர்.

இதனிடையே, கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் பகுதியில் வெள்ளச் தேசங்களை பார்வையிட்ட ஒன்றியக் குழுவினரை அமைச்சர் சி. வெ. கணேசன் சந்தித்து மனு ஒன்றை அளித்தார். அதில், பண்ருட்டி, நெல்லிக்குப்பம் பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த விவரங்களை ஒன்றிய குழுவினரிடம் அவர் தெரிவித்துள்ளார்.